**அக்டோபர் - 30**

**"இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது." - மத் 6 : 24**

"தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது." அனுபவமும் நாம் கவனிக்கிற காரியங்களும் இதை உறுதிப்படுத்துகிறது. ஆகையால் வழக்கமாக ஜனங்கள் குளிராயாவது, அனலாயாவது இருக்கிறதை நாம் காண்கிறோம். நாம் "முதலாவது (முக்கியமாக) தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுகிறவர்களாக" இருக்க வேண்டும். இது நம்முடைய முக்கியமான அக்கறையாக இருக்க வேண்டும். இது நம்மிடமிருந்து நம்முடைய எல்லா சமயத்தையும், கவனத்தையும், எண்ணத்தையும், சக்தியையும், செல்வாக்கையும்,செல்வத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த ஜீவியத்துக்குரிய அவசியமானவைகள் இவைகளுக்கு நீங்கலாக இருக்கிறதாக அர்த்தம் செய்யப்படுகிறது. எந்த அளவிற்கு இவைகளையும் பரம காரியங்களின் அக்கறையில் உபயோகிக்க இஷ்டமுள்ளவர்களாய் இருக்கிறோமோ, அந்த அளவினால் நம்முடைய அன்பும், ஆர்வமும் வெளிப்படுத்தப்படும். **- Z ’01, 61 (R 2764)**

இரண்டு எஜமான்கள் என்றால், அக்கறைகளுக்கும், நோக்கங்களும், ஒன்றாகக் கொண்டிருக்கிற இரண்டு எஜமான்களை அல்ல, ஆனால் தங்களுடைய அக்கறைகளும், நோக்கங்களும் முரண்டுபடுகிற இரண்டு எஜமான்களை நமது கர்த்தர் இங்கே குறிக்கிறார். அப்படி இல்லாவிடில், நம்முடைய எஜமான்களாக தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும் நம்மால் ஊழியஞ்செய்ய முடியாது. அவர்களுடைய அக்கறைகளும், நோக்கங்களும் எல்லா வகையிலும் ஒத்ததாய் இருக்கின்றன. இவர்களுக்கு நாம் ஊழியஞ்செய்ய முடியும். ஆனால், தேவனுடைய அக்கறைகளும், நோக்கங்களும் சாத்தானுடைய அக்கறைகளும், நோக்கங்களும் முரண்டுபடுகிறதால், நாம் இவர்கள் இருவருக்கும் ஊழியஞ்செய்யக் கூடாதவர்களாயிருக்கிறோம். இந்த ஒரே காரணத்துக்காக நாம் கிறிஸ்துவுக்கும், அந்திக்கிறிஸ்துவுக்கும் ஊழியஞ்செய்ய முடியாது. மாம்சத்துக்கும், ஆவிக்கும் ஊழியஞ்செய்ய முடியாது. இந்த உலகத்துக்கும், அடுத்த உலகத்துக்கும் ஊழியஞ்செய்ய முடியாது. தப்பான உபதேசங்களுக்கும், சத்தியத்துக்கும் ஊழியஞ்செய்ய முடியாது. எவ்வளவு சீக்கிரம் இந்தத் தத்துவத்தை நாம் தெளிவாக அறிந்து கொண்டு செயல்படுகிறோமோ, அவ்வளவு கிறிஸ்தவர்களாகிய நமக்கு நலமானதாக இருக்கும். **- P ’30, 183.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**ஆதி 39:9; ஓசி 10:2; தானி 1:8-16; 3:12-25; லூக் 16:13; 1ராஜா 18:21; யோசு 24:14-25; மத் 4:8-10; 12:25; மாற் 10:21-23; யோவா 10:42,43; 1கொரி 10:21; எபி 11:24-26; யாக் 1:8.**

**கோபுர வாசிப்பு : Z ’15, 109 (R 5666)**

**வினாக்கள் : இந்த வாரத்தில் என் தியானத்தில் தேவனுக்காக மட்டுமே என்னை அர்ப்பணித்தேனா? நான் யாருக்கு ஊழியம் செய்தேன்? எனது தனிப்பட்ட அர்ப்பணத்தில் உதவியாக அல்லது இடையூறாக இருந்தது என்ன? நான் என்ன பலனை அடைந்தேன்?**